# நெல்லிக்குப்பம் நகராட்சி
## நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்

2019–ம் ஆண்டு நவம்பர் மாதம் 21–ம் தேதி வியாழக்கிழமை (21.11.2019 ) மாலை 5.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ் .பிரபாகரன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி.

**மன்றபொருள்.1.** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-IV) அரசாணை நிலை எண்.73, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை நிலை எண்.76, நாள்.26.07.2018 இதனை தொடர்ந்து வரப்பெற்ற நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.20555/2018/R1, நாள்.30.07.2018ன்படி, இந்நகர மன்ற தீர்மான எண்.224, நாள்.24.10.2018ல் மன்றப்பொருள் ஒப்புதல் பெற்று மேலும் 01.04.2018 முதல் திருத்தி அமைக்கப்பட்ட மண்டல மதிப்பின்படி, சொத்துவரி பொது சீராய்வு மேற்கொண்டு குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% மிகாமலும், குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100% மிகாமலும் இந்நகராட்சியில் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளப்பட்டது.

தற்போது, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(MA-IV) அரசாணை நிலை எண்.150, நாள்.19.11.2019 அதனை தொடர்ந்து வரப்பெற்ற நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.40032/2012/R1, நாள்.20.11.2019ல் திருத்தி அமைக்கப்பட்ட மண்டல மதிப்பின்படி, சொத்துவரி பொது சீராய்வு உயர்வு செய்யப்பட்ட வரித் தொகையினை தற்காலிகமாக நிறுத்தி வைக்கவும், சொத்துவரி விதிப்புக்கான மண்டல மதிப்பு (Zonal Rate's) 01.04.2018 முதல் உயர்த்தப்பட்டதையும் மற்றும் 01.10.2017ம் தேதி முதல் சொத்துவரி மறு சீரமைப்பு (Remeasurement) செய்து உயர்த்தப்பட்டதையும் நிறுத்தி வைக்கவும், 31.03.2018முன் உள்ள கேட்பு தொகையினை வசூலிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி, வரப்பெற்ற அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: 1. பதிவு செய்யலாம்.
2. அரசாணையின்படி செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.3333/2019/அ1)**

**தீர்மான எண் : 280** அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .

**மன்றப்பொருள்.2** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட முள்ளிகிராம்பட்டு கிராமம் வார்டு B , பிளாக் 10 T.S.No. **36/2** இடத்தின் பரப்பு **137214** சதுரடியாகும். இவ்விடம் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவாக அமைந்ததால் மனைப்பிரிவின் உரிமையாளர் திரு/திருமதி. அப்துல் அமீது என்பவர் குடியிருப்பு மனைப்பிரிவினை வரன் முறை செய்ய நகர் ஊரமைப்பு ஆணையருக்கு விண்ணப்பம் செய்ததின் பேரில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் வி.ம. அவர்கள் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ (வி.ம.) எண் **R 1293/2018** என எண்ணிட்டு குடியிருப்பு மனைப் பிரிவினை கொள்கையளவில் ஒப்புதல் செய்து இந்நகராட்சிக்கு **19.11.2018ல்** வரப்பெற்றுள்ளது. பவர் சிட்டி மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்காவினை ரூ.100/– முத்திரை தாளில் தானமாக பெற்றுக் கொள்ளவும், மனுதாரர் கட்டணங்கள் செலுத்தியதும் அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

முள்ளிகிராம்பட்டு கிராமம், வார்டு B , பிளாக் 10 நகரளவு எண்.**36/2** ல் பரப்பு 137214 சதுரடி குடியிருப்பு மனைப்பிரிவாக கொள்கையளவில் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ (வி.ம.) எண் **R 1293/2018** என எண்ணிட்டு வரப்பெற்றுள்ளது. இதிலுள்ள சாலை மற்றும் பூங்காவினை நகராட்சி ஆணையர் பெயரில் ரூ.100/– முத்திரை தாளில் தானமாக பெற மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மனுதாரருக்கு கட்டணங்கள் செலுத்தியதும் மனைக்கு வரன்முறை உத்திரவு அளிக்கலாம்.

**(ந.க.எண்: 2921/2019/F1)**

**தீர்மான எண் : 281** அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .

**<u>மன்றப்பொருள்.3.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல் முறை ந.க..எண். 17349/2019/E3 நாள். 16.10.2019 ன் படி தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் **(TURIP) 2019-20** ஆம் ஆண்டின் கீழ் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளை மேம்படுத்தும் பொருட்டு ரூ.400/-இலட்சம் மதிப்பீட்டிற்கு உள்ள பணிகளை ஒப்பந்தபுள்ளிக்காக 21.11.2019 அன்று மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தபுள்ளி செய்தி மலரிலும் விளம்பரம் செய்த வகையில் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புதுறை , சென்னை – 9 அவர்கள் மூலமாக கொடுக்கப்பட்டு என்த்ரால் கம்யூனிகேசன்ஸ் பிரைவேட் லிமிடெட் (Enthrall Communications Pvt Ltd) , சென்னை அவர்களுக்கு ரூ.18848/– பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2422 /2019/இ1)**

**<u>தீர்மான எண் : 282 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றப்பொருள்.4.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் ஈப்பு TN-31/BA–1896 வாகனத்தில் திடிரென பழுதுகள் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் மேற்படி கீழ்கண்ட பழுதுகளை சரி செய்ய உத்தேச செலவினம் ரூ .35000/–ஐ நகராட்சி பொது நிதியில் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>பழுதுகள் விபரம்</u>

1.ஆயில் சர்வீஸ் .
2.பம்பு நாசில் சர்வீஸ் .
3.வைப்பர் பிளைடு மாற்றுதல்
4.ரிமோட் சரி செய்தல்
5.பல்பு மாற்றி புதிய கட்டஅவுட்டர் மாற்றுதல்
6.ஒயரிங் சரி செய்தல் .
7.வாட்டர் & கிரிஸ் சர்வீஸ்
8.ஆயில் பில்டர் மாற்றுதல்
9.AC சுவிட்சு மாற்றுதல்
மற்றும் இதர பணிகள் .

அலுவலக குறிப்பு :–1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம் .

**(ந.க.எண்.<u>3182</u> /2019/இ1)**

**<u>தீர்மான எண் : 283 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றப்பொருள்.5.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியின் பொது நிதியின் கீழ் தனி அலுவலரின் முன் அனுமதி நாள் .07.11.2019 ன்படி 11.10.2019 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாயில் ) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | அலுவலக ஈப்பு வாகனம் TN-31/BA 1896 க்கு | 35000/- | ஓம் சக்தி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் DSN நகர் , காரமணிக்குப்பம் , | **ரூ.34987/–** |

| | | | | |
|---|---|---|---|---|
| | பழுது பார்த்தல் பணி | | விஜியலட்சுமி ஆட்டோமெபைல்ஸ் கடலூார் , | ரூ.39058/– |

<u>அலுவலகக்குறிப்பு : –</u> 1. வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான தொகை ரூ.**34987/–** விலைப்புள்ளிஅளித்துள்ள ஓம் சக்தி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் , காரமணிக்குப்பம் , அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

2. மன்றத்தின் அனுமதி எதிர் நோக்கி தனி அலுலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண் . 3182/2019/இ1)**

<u>**தீர்மான எண் : 284 அலுவலக குறிப்பினை ஏற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்க அனுமதிக்கப்பட்டது**</u>

<u>**மன்றப்பொருள்.6.**</u> நெல்லிக்குப்பம் நகராட்சியின் நகரமன்ற தலைவர், வார்டு உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான நகர்புற உள்ளாட்சி மன்ற சாதாரண தேர்தல்–2019 மற்றும் நகரமன்ற துணைத்தலைவர், குழு உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான மறைமுக தேர்தல்கள்–2019 ஆகிய தேர்தல்களை நடத்திட கீழ்காணும் விபரப்படியான தேர்தல் உத்தேச செலவினம் ரூ**30.00** இலட்சம் ஆகும். எனவே, மேற்படி செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அல்லது அரசால் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | தேர்தல் செலவினங்களின் தலைப்புகள் |
|---|---|
| 1 | நகர்புற உள்ளாட்சித் தேர்தல்–2016 அறிவிப்பு வெளியானதும் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலுக்கு வந்தவுடன் நகரிலுள்ள அரசு கட்டிடங்கள், நகராட்சி கட்டிடங்கள், அனைத்து பள்ளி கட்டிடங்கள் மற்றும் தனியார் கட்டிட சுவர்களில் அனுமதியின்றி எழுதப்பட்டுள்ள அரசியல் கட்சி விளம்பரங்களை அழித்தல், டிஜிட்டல் பேனர்கள் அகற்றுதல் மற்றும் போஸ்டர்கள் அகற்றுதல் மற்றும் வாக்கு பதிவின்போது வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டர் தூரம் எல்லை கோடு அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினங்கள். |
| 2 | நகர்புற உள்ளாட்சித் தேர்தல் அலுவலக பணிக்கு தேவையான எழுது பொருட்கள் (A4–பேப்பர்–15 ரீம், Legal பேப்பர்-5 ரீம், உறையுடன் கூடிய CD–50 எண்ணிக்கைகள், உறையுடன் கூடிய DVD–50 எண்ணிக்கைகள்) எழுத தேவைான 10 குயர் வெள்ளை பேப்பர், பதிவேடுகள், ரப்பர் முத்திரைகள், பிரித்தெறி சீல் ஆகியவைகள் மற்றும் இதர எழுது பொருள் செலவினங்கள். |
| 3 | வாக்குச்சாவடி பட்டியல், வாக்காளர் பட்டியல், மின்னனு வாக்கு இயந்திரத்தில் பொருத்தும் வேட்பாளர் பெயர், புகைப்படம், சின்னங்கள் அடங்கிய வாக்கு சீட்டுகள், அஞ்சல் வழி வாக்குச் சீட்டுகள் மற்றும் வாக்காளர்களுக்கு வழங்கும் பூத் சிலிப் ஆகியவைகள் அச்சடித்து பெற ஆகும் தோராய செலவினங்கள். |
| 4 | வார்டு பிரிவினை நகர வரைபடங்கள், வாக்குச்சாவடி (Polling Station Map) வரைபடங்கள் (ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் தனித்தனியே), மண்டலம் பிரிப்பு (Zonal Map) வரைபடங்கள், வாக்கு எண்ணிக்கை மையம் (Counting Centre) வரைபடங்கள் ஆகியவைகள் ஆட்டோ கேட் (Auto cad)ல் தயாரித்து பெற ஆகும் தோராய செலவினங்கள். |
| 5 | நகர்புற உள்ளாட்சித் தேர்தல் பணிக்கு வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கை அலுவலர்கள் ஆகியோர்களுக்கு மூன்று முறை பயிற்சி வகுப்புகள் நடத்தும் பணி மேற்கொள்ளுதல், |

| | |
|---|---|
| | மண்டப வாடகை, ஒலிபெருக்கி அமைத்தல், வேட்பு மனு தாக்கலின் பொழுதும், வாக்கு பதிவு நாளிலும் மற்றும் வாக்கு எண்ணிக்கையின் போதும் வீடியோ படம் எடுத்தல் ஆகிய பணிகளுக்கு ஆகும் தோராய செலவினங்கள். |
| 6 | நகர்புற உள்ளாட்சித் தேர்தல் வாக்குச்சாவடிகளுக்கு தேவையான பொருட்கள், வாக்கு எண்ணும் மையத்திற்கு தேவையான பொருட்கள், சணல் சாக்குகள் (Gunny Bag) வாடகை மற்றும் இதர தோராய செலவினங்கள். |
| 7 | அனைத்து வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கை மையம் ஆகியவற்றில் மின் வசதி, சாய்தள வசதி, குடிநீர் வசதி, கழிவறை வசதி, சாமினா பந்தல், வயது முதிர்ந்தவர்கள் மற்றும் மாற்று திறானளிகளுக்கு வீல் சேர் வாடகை ஆகியவைகள், வாக்கு எண்ணிக்கை மையத்தில் பாதுகாப்பு வேண்டி, தடுப்பாணை அமைத்தல், மின்தடை ஏற்படா வண்ணம் ஜெனரேட்டர் வாடகைக்கு எடுத்தல், அஞ்சல் வழி வாக்குச்சீட்டுகள் எண்ணிட வாக்கு எண்ணும் ட்ரே தயாரித்தல், அஞ்சல் வழி வாக்குகள் பெற தனியே பெரிய அளவில் ஒரு கலாய் தகட்டினால் ஆன வாக்குப்பெட்டி தயாரித்தல், வாக்கு எண்ணிக்கைக்கு தேவையான மேசைகள், நாற்காலிகள் வாடகைக்கு எடுத்தல் மற்றும் வாக்கு எண்ணிக்கை விவரத்தினை ஒவ்வொரு சுற்று முடிவடைந்தவுடன் வெற்றி பெற்ற வேட்பாளர்களின் பெயர்களை ஒலிபெருக்கி மூலம் அறிவிக்க ஒலிபெருக்கி வாடகைக்கு எடுத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினங்கள் மற்றும் இதர செலவினங்கள். |
| 8 | வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பேச், தேர்தல் அவசரம் ஸ்டிக்கர்கள், வார்டு உறுப்பினர் தேர்தல், தலைவர் தேர்தல் வேட்பாளர்கள் பெயர் அடங்கிய போஸ்டர்கள், வாக்குச்சாவடி எண் மற்றும் வாக்கு பதிவு பகுதிகளின் தெருக்களின் பெயர்கள் அடங்கிய போஸ்டர்கள், வாக்குச்சாவடி மையத்தில் வாக்காளர்கள் சிரமமின்றி வாக்களிக்க ஏதுவாக வாக்குச்சாவடியில் உள்ளே, வெளியே ஸ்டிக்கர்கள், அங்கீரிக்கப்பட்ட அரசியல் கட்சி சின்னங்கள், சுயேட்சை வேட்பாளர்களுக்கான சின்னங்கள், அஞ்சல் வழி வாக்குச் சீட்டுகளுக்கான உறைகள் மற்றும் இதர அத்தியாவசிய எழுது பொருட்கள் வாங்கிட ஆகும் தோராய செலவினங்கள். |
| 9 | மண்டல அலுவலர்களுக்கான வாகனம் வாடகை, டீசல் செலவினம், வாக்குச்சாவடி அலுவலர்கள், வாக்கு எண்ணிக்கை அலுவலர்கள், மண்டல அலுவலர்கள், வாகன ஓட்டுநர்கள், வரவேற்பு அலுவலர்கள், நுண் பார்வையாளர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், தேர்தல் பிரிவு எழுத்தர் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLO's) ஆகியோர்களுக்கான ஊக்க படிகள் (Incentive Allowance) வழங்க ஆகும் தோராய செலவினங்கள். |
| 10 | நகர்புற உள்ளாட்சித் தேர்தல் பணிகளுக்கு வேட்பு மனுக்கள் பெறும் நாட்கள், வாக்கு எண்ணிக்கை மையத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபடும் காவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும், வாக்கு எண்ணிக்கை மையத்தில் வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடும் அலுவலர்கள், ஊழியர்கள், பணியாளர்கள் மற்றும் பாதுகாவலர்கள் ஆகியோர்களுக்கான உணவீட்டு செலவினம். |
| 11 | நகர்புற உள்ளாட்சித் தேர்தலுக்கு பயன்படுத்தப்படும் மின்னனு வாக்குப்பதிவு இயந்திரத்தினை வெளி மாநிலத்திலிருந்து கொண்டு வருவதற்க்கும் அதனை மீள கொண்டு செல்வதற்கும் ஆகும் செலவினம், மின்னனு வாக்குப்பதிவு இயந்திரத்தினை முதல் நிலை ஆய்வு (First Level Checking) பணிக்கான செலவினம், மற்றும் தேர்தலுக்காக மேற்க்கொள்ளப்படும் இதர செலவினங்கள். |

அலுவலக குறிப்பு:- 1.தேர்தல் அவசர அவசியம் கருதி மேற்காணும் செலவினங்களை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**2.**தேர்தலுக்காக அரசால் ஒதுக்கப்படும் நிதியை ஏற்கனவே வருவாய் ' நிதியிலிருந்து தேர்தலுக்காக மேற்க்கொள்ளப்பட்ட செலவினங்களுக்காக வருவாய் நிதியில் ஈடு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3. மேற்காணும் செலவினங்களை அரசால் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அவ்வாறு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை விட செய்யப்படும் கூடுதல் செலவினங்களை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோ.எண் 045/2019/எப்1)**

**<u>தீர்மான எண் : 285 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .</u>**

<u>மன்றப்பொருள்.7.</u> டெங்கு காய்ச்சல் நகர் பகுதியில் வராமல் தடுத்திடும் பொருட்டு உரிய நடவடிக்கைகள் மேற்க்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையயளர் மற்றும் நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் அவர்களின் ஆய்வுக்கூட்டங்களில் அறுவுறுத்தி வருவதின் காரணமாக தடுப் நடவடிக்கைகளில் ஒரு செயலாக வீடுகள் தோறும் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் நோட்டீஸ் வழங்கியும் DBC பணியாளர்கள் வீடுகள் ஆய்வு தேதியினை குறிப்பிட வாராந்திர காலாண்டர் ஸ்டீக்கர்ஸ் வீடுகள் தோறும் ஒட்டிட தேவையான ஸ்டீக்கர்கள் தேவைப்படுவதினால், கூட்டுறவு நிறுவனத்தில் அச்சிட்டு வழங்கிட ஆணை பிறப்பித்திடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.75 வட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(அ.கு) 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. கூட்டுறவு நிறுவனமான திருநெல்வேலி மாவட்ட பல்நோக்கு சேவை இண்டஸ்ரியல் கூட்டுறவு சொசைட்டி லிமிடெட் இண்ட் எண்:TNY-2 திருநெல்வேலி என்கின்ற நிறுவனத்திற்க்கு பணி உத்திரவு வழங்கியதினை மன்றம் அனுமதிக்கலாம்.

3.பொது சுகாதாரம் மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு இவற்றின் அவசர அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதினை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 3202/2019/எச்1)**

**<u>தீர்மான எண் : 286 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

<u>மன்றப்பொருள்.8.</u>நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள துப்புரவு கோட்டம்–1ல் உள்ள 1.நெல்லிக்குப்பத்தான் வாய்க்கால் 2. சாவடியான் வாய்க்கால்களை செயின் டோசர் (Hitachi) மூலம் செடி, கொடிகளை அகற்றி தூர்வாரி மழைநீர் தங்கு தடையின்றி செல்ல ஏதுவான பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.2.50 லட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, குறுகியகால விலைப்புள்ளிக் கோரியதினை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2015/2017/எச்1**

**<u>தீர்மான எண் : 287 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

<u>மன்றப்பொருள். 9</u> நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள துப்புரவு கோட்டம்–2ல் உள்ள 1.வெள்ளப்பாக்கத்தான் கிளை வாய்க்கால் 2. கலவை உரக்கிடங்கு ஓரமாக செல்லக்கூடிய வாய்க்கால்களை செயின் டோசர்(Hitachi) மூலம் செடி, கொடிகளை அகற்றி தூர்வாரி மழைநீர் தங்கு தடையின்றி செல்ல ஏதுவான பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.2.50 லட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :– 1. மன்றம் அனுமதிக்கலாம்

2.அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, குறுகியகால விலைப்புள்ளிக் கோரியதினை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2015/2017/எச்1**

**<u>தீர்மான எண் : 288 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**மன்றப்பொருள். 10.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள துப்புரவு கோட்டம்–1ல் உள்ள 1. காளி கோயில் அருகில் வாய்க்கால் (மேல்பாதி)

2.ஒத்தவாடை தெரு பள்ளி வாசல் அருகில்

3.திருவள்ளுவர் நகர் கடைசி நெசனூர் பாட்டை குப்பைமேடு அகற்றுதல்

4.சரவணபுரம் மற்றும் மேல்பாதி புதுரோடு குப்பைமேடு அகற்றுதல்

5.சரவணபுரம் – கழிவுநீர் கால்வாய்களை JCB மூலம் செடி, கொடிகளை அகற்றி தூர்வாரி மழைநீர் தங்கு தடையின்றி செல்ல ஏதுவான பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.2.00 லட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று, குறுகியகால விலைப்புள்ளிக் கோரியதினை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2015/2017/எச்1**

**தீர்மான எண் : 289 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள். 11.**நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள துப்புரவு கோட்டம்–2ல் உள்ள

1. சோழவல்லி பாட்டை வாய்க்கால்
2.அண்ணாநகர் வாய்க்கால்
3.அண்ணாநகர் மண்மேடு அகற்றுதல்
4.ரத்தினம் தெரு மண்மேடு அகற்றுதல்
5.கந்தசாமி தெரு மண்மேடு அகற்றுதல்
6.கலவை உரகிடங்கு புதிய குப்பைகள் சமன்படுத்தும் பணி ஆகிய

பணிகளை JCB மூலம் செடி, கொடிகளை அகற்றி தூர்வாரி மழைநீர் தங்கு தடையின்றி செல்ல ஏதுவான பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.2.00 லட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, குறுகியகால விலைப்புள்ளிக் கோரியதினை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2015/2017/எச்1**

**தீர்மான எண் : 290 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள். 12.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு –2ல் உள்ள பகுதிகளில் உள்ள மண்மேடுகள், செடி மற்றும் கொடிகள் அகற்றவும், கழிவுநீர் வாய்க்காலில் மழைநீர் தேங்கா வண்ணம் JCB இயந்திரம் மூலம் தூர்வாரும் பணி மேற்கொள்ளும் பணிக்கு 01.11.2019 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர்/ முகவரி | விலைப்புள்ளி ரூ. |
|---|---|---|
| 1 | திருமதி. எஸ்.புவனேஸ்வரி,<br>ஒப்பந்ததாரர்,<br>நெல்லிக்குப்பம். | ரூ.850/–<br>(ஒரு மணி நேரத்திற்கு) |
| 2 | திருமதி.பரிமளா,<br>ஒப்பந்ததாரர்,<br>நெல்லிக்குப்பம். | ரூ.925/–<br>(ஒரு மணி நேரத்திற்கு) |
| 3 | ஜெய் அன்ட் கோ,<br>ஒப்பந்ததாரர்,<br>கடலூர் | ரூ.900/–<br>(ஒரு மணி நேரத்திற்கு) |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் கண்ட திருமதி. எஸ்.புவனேஸ்வரி, ஒப்பந்ததாரர் நெல்லிக்குப்பம் கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதால், மேற்படி ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கலாம். மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மழைக்காலம் தொடங்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட பணிக்கு உத்திரவு வழங்கியதினை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2015/2017/எச்1)**

**தீர்மான எண் : 291 அலுவலக குறிப்பினை ஏற்று குறைந்த விலைப்புள்ளியை ஏற்க அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள். 13.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு –1ல் உள்ள பகுதிகளில் உள்ள மண்மேடுகள், செடி மற்றும் கொடிகள் அகற்றவும், கழிவுநீர் வாய்க்காலில் மழைநீர் தேங்கா வண்ணம் JCB இயந்திரம் மூலம் தூர்வாரும் பணி மேற்கொள்ளும் பொருட்டு 01.11.2019 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர்/ முகவரி | விலைப்புள்ளி ரூ. |
|---|---|---|
| 1 | திருமதி. எஸ்.புவனேஸ்வரி,<br>ஒப்பந்ததாரர்,<br>நெல்லிக்குப்பம். | ரூ.850/–<br>ஒரு மணி நேரத்திற்கு |
| 2 | திருமதி.பரிமளா,<br>ஒப்பந்ததாரர்,<br>நெல்லிக்குப்பம். | ரூ.925/–<br>ஒரு மணி நேரத்திற்கு |
| 3 | ஜெய் அன்ட் கோ,<br>ஒப்பந்ததாரர்,<br>கடலூார் | ரூ.900/–<br>ஒரு மணி நேரத்திற்கு |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் கண்ட திருமதி. எஸ்.புவனேஸ்வரி, ஒப்பந்ததாரர் நெல்லிக்குப்பம் கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதால், மேற்படி ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கலாம். மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மழைக்காலம் தொடங்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட பணிக்கு உத்திரவு வழங்கியதினை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2015/2017/எச்1)**

**தீர்மான எண் : 292 அலுவலக குறிப்பினை ஏற்று குறைந்த விலைப்புள்ளியை ஏற்க அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள். 14.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு –2ல் உள்ள பகுதியில் மழைநீர் வாய்க்காலில் தேங்கா வண்ணம் செயின்டோசர்(Hitachi) வாகனம் மூலம் தூர்வாரும் பணி மேற்கொள்ளும் பொருட்டு 01.11.2019 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர்/ முகவரி | விலைப்புள்ளி ரூ. |
|---|---|---|
| 1 | திருமதி. எஸ்.புவனேஸ்வரி,<br>ஒப்பந்தக்காரர்,<br>நெல்லிக்குப்பம். | ரூ.2500/–<br>ஒரு மணி நேரத்திற்கு |
| 2 | திருமதி.பரிமளா,<br>ஒப்பந்ததாரர்,<br>நெல்லிக்குப்பம். | ரூ.2700/–<br>ஒரு மணி நேரத்திற்கு |
| 3 | ஜெய் அன்ட் கோ,<br>ஒப்பந்ததாரர்,<br>கடலூார் | ரூ.2650/–<br>ஒரு மணி நேரத்திற்கு |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் கண்ட திருமதி. எஸ்.புவனேஸ்வரி, ஒப்பந்ததாரர் நெல்லிக்குப்பம் கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதால், மேற்படி ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கலாம். மன்றத்தின் அனுமதிக்கு

<u>அலுவலகக்குறிப்பு:</u> 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மழைக்காலம் தொடங்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட பணிக்கு உத்திரவு வழங்கியதினை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2015/2017/எச்1)**

<u>தீர்மான எண் : **293** அலுவலக குறிப்பினை ஏற்று குறைந்த விலைப்புள்ளியை ஏற்க அனுமதிக்கப்பட்டது .</u>

**மன்றப்பொருள்.15.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு –1ல் உள்ள பகுதியில் மழைநீர் வாய்க்காலில் தேங்கா வண்ணம் செயின்டோசர்(Hitachi) வாகனம் மூலம் தூர்வாரும் பணி மேற்கொள்ளும் பொருட்டு **01.11.2019** அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர்/ முகவரி | விலைப்புள்ளி ரூ. |
|---|---|---|
| 1 | திருமதி. எஸ்.புவனேஸ்வரி,<br>ஒப்பந்தக்காரர்,<br>நெல்லிக்குப்பம். | ரூ.2500/–<br>ஒரு மணி நேரத்திற்கு |
| 2 | திருமதி.பரிமளா,<br>ஒப்பந்ததாரர்,<br>நெல்லிக்குப்பம். | ரூ.2700/–<br>ஒரு மணி நேரத்திற்கு |
| 3 | ஜெய் அன்ட் கோ,<br>ஒப்பந்ததாரர்,<br>கடலூர் | ரூ.2650/–<br>ஒரு மணி நேரத்திற்கு |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் கண்ட திருமதி. எஸ்.புவனேஸ்வரி, ஒப்பந்ததாரர் நெல்லிக்குப்பம் கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதால், மேற்படி ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கலாம். மன்றத்தின் அனுமதிக்கு

<u>அலுவலகக்குறிப்பு:</u> 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மழைக்காலம் தொடங்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட பணிக்குஉத்திரவு வழங்கியதினை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2015/2017/எச்1)**

<u>தீர்மான எண் : **294** அலுவலக குறிப்பினை ஏற்று குறைந்த விலைப்புள்ளியை ஏற்க அனுமதிக்கப்பட்டது .</u>

**மன்றப்பொருள்.16.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் **13** எண்ணிக்கை மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளின் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யபட்டு வருகிறது . பாதுகாக்கப்பட்ட குடிநீரில் தொற்று நோய் பரவாமல் தேவையான Liquid Chlorine வாங்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.**3,00,000/–**க்கும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு : –</u>. மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண் . 4101/2019/இ1)**

<u>தீர்மான எண் : **295** அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>

**மன்றப்பொருள்.17.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் மன்ற தீர்மான எண். **262**, நாள் 31.10.2019 ன்படி 14.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | KSAR ரோடு காமராஜ் நகர் முதல் பத்திர பதிவு ஆபிஸ் ( Register Office ) வரை பகீர்மான குழாய் பதிக்கும் பணி . | 2.50 | திருமதி . S.புவனேஸ்வரி | **0.16%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. JAY AND CO | **4.68%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு :-1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான **0.16 %** ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருமதி . S.புவனேஸ்வரி ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம் .

**(ந.க.எண் . 3184/2019/இ1)**

**தீர்மான எண் : 296** அலுவலக குறிப்பினை ஏற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்க அனுமதிக்கப்பட்டது .

**மன்றப்பொருள்.18.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட நெல்லிக்குப்பம் கிராமம் வார்டு– D, பிளாக்–14, T.S.No.93,110,111,112,113 & 114 பகுதியானது சர்வே ஆவணங்களின்படி சர்க்கார் புறம்போக்கு குளம் மற்றும் நத்தம் புறம்போக்கு என உள்ளது. ஜலசக்தி அபியான் திட்டத்தில் குளம் தூர்வார நடவடிக்கை எடுக்கும் போது அக்குளத்தில் 8 செண்ட் தனக்கு உரிமை உள்ளதாக திரு.தெய்வநாயகம் என்பவர் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். எனவே, இவ்வழக்கு தொடர்பாக அபிடவிட் (Affidavit ) பதிவு செய்து ஆணையாளர் சார்பாக உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு. வி.ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்களை வாதாடுமாறு கோரப்பட்டுள்ளது. அதற்கான வழக்குத் தொகை ரூ.15000/– வழங்கக் கோரி கடிதம் வரப்பட்டுள்ளது. எனவே, மேற்படி வழக்கு செலவினம் ரூ. 15000/–ஐ வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- 1. மன்றம் அனுமதிக்கலாம்.

1. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:- 1396/2015/எப்1

**தீர்மான எண் : 297** அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி.